**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 25.03.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக**
**முதலாமாண்டு இளநிலை (2021-22) வகுப்புகள் தொடங்கும் நாள் பற்றிய விபரம்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இளமறிவியல் பட்டபடிப்புகளுக்கான கலந்தாய்வு (2021-2022) 23.02.2022 முதல் நடத்தப்பட்டது. நகர்வு முறையில் இடங்களை நிரப்பும் பணியும் இணையாக நடைபெற்று கொண்டு வருகிறது. இளமறிவியல் பட்டபடிப்புகளுக்கான கலந்தாய்வை (2021-2022) இந்த மாத இறுதிக்குள் முடிக்க பல்கலைக்கழகம் திட்டமிட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் உறுப்பு மற்றும் இணைப்புக் கல்லூரிகளை ஏப்ரல் 18, 2022 அன்று திறக்க பல்கலைக்கழகம் முடிவு செய்துள்ளது. இட ஒதுக்கீடு பெற்ற மாணவ, மாணவிகளுக்கு, கல்லூரி தொடங்கும் நாளை முன்கூட்டியே தெரிவிப்பதின் வாயிலாக, தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கல்லூரிகளுக்கு அவர்களின் பயணத்தைத் திட்டமிட முடியும் என்று முனைவர். மா. கல்யாணசுந்தரம் முதன்மையர் மற்றும் தலைவர் (மாணவர் சேர்க்கை) தெரிவித்தார்.

மக்கள் தொடர்பு அலுவலர்